දුරකථන
தொலைபேசி
Telephones
011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011-2876169
011-2876181

විද්‍යුත් තැපෑල
மின் - அஞ்சல்
E-mail
info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை
No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla


මගේ අංකය
எனது இல.
My No. PSC/EST/03-05/04/2017

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2021.11.24

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை : 02/2021

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

<u>மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பூர்த்தி செய்யாமையின் அடிப்படையில் பதவி உயர்வினைப் பெற்றுக் கொள்ளாது ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்குத் தர உயர்வுகளை வழங்கல்.</u>

2007.07.01 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் அரசாங்க சேவையின் பதவியொன்றிற்கு நியமிக்கப்பட்டு 2019.08.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றைய அரசகரும மொழித் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாமையின் அடிப்படையில் தர உயர்வுகளைப் பெற்றுக் கொள்ளாது அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அரச அலுவலர்களுக்கு சலுகையொன்றினை வழங்கும் நோக்கில் பின்வருமாறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

02. அதற்கமைவாக சேவைப்பிரமாணக் குறிப்புக்கள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு தரத்திலிருந்து இன்னொரு தரத்திற்குப் பதவி உயர்வைப் பெற்றுக் கொள்வதற்கான அரசகரும மொழித் தேவைப்பாட்டைத் தவிர ஏனைய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் ஓய்வுபெற்ற தினத்திற்கு முந்தைய தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக ஏற்புடைய தர உயர்வினை வழங்குவதற்கு மற்றும் நிலுவைச் சம்பளம் செலுத்தாத அடிப்படையில் குறித்த உத்தியோகத்தர்களின் ஓய்வூதியத்தினைக் கணக்கிடுவதற்கு ஏற்புடைய நியமிப்பு செய்யும் அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

i. வெற்றிடங்களின் எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்பு அல்லது பதவி உயர்வு தொடர்பில் இச் சலுகையை ஏற்புடையதாகக் கொள்ள முடியாது.
ii. மற்றைய அரசகரும மொழித் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யாமையின் அடிப்படையில் இதுவரை கிடைக்கப்பெறாத வேறு பதவி உயர்வுகளையோ நலன்களையோ இச் சலுகையினை வழங்குவதன் பேரில் மீளப் பெற்றுக் கொள்ள முடியாது.

03. மேற்குறித்த கட்டளைகளுக்கு அமைவாகக் குறித்த உத்தியோகத்தர்களின் தர உயர்வுகளை வழங்குவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை ஏற்புடைய நியமிப்பு செய்யும் அதிகாரிகள் வகுத்தல் வேண்டும் என்பதுடன், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் தொடர்பில் சிக்கல்கள் எழும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அது குறித்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எம்.ஏ.பீ. தயா செனரத்
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு